மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை
*ஒ.எஸ்.2/2021*
2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 06-ம் நாள் புதன்கிழமை

**வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண். 44வது பிரிவு 6(1)ன்படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.எஸ்.செல்லபாண்டியன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செபஸ்தியம்மாள் | சாதி | : |
| த-பெ | : | சமயம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | வயது | : |

**வா.சா. 1 செபஸ்தியம்மாள் ஆஜர்.**

**3, 4, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனது தகப்பனார் பெயர் சாமிநாதன் என்றால் சரிதான். சாமிநாதனின் தகப்பனார் பெயர் சவரிமுத்து என்றால் சரிதான். சவரிமுத்துவுக்கு எனது தகப்பனார் சாமிநாதன், ஆரோக்கியம், குழந்தைச்சாமி, ஞானரத்தினம், லூர்து, ராசாமணி ஆகியோர்கள் மக்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சவரிமுத்துவின் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

அதேபோல 2வது பிரதிவாதி ஜெபமாலை உடன்பிறந்த சகோதாரர் இறந்து போன ஜான் போஸ்கோ என்பவரின் மனைவி ஜெனிபர் (எ) பாக்கியத்தை அவரது மக்களையும் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் எனது பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 3 புஞ்சை 1 வீடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியாது. தாவா சொத்துக்களின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களின் நான்குமாலும் எனக்கு தெரியாது. 4வது லக்க சொத்திற்குரிய வீட்டின் கதவு எண் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை எப்பொழுது கடைசியாக பார்த்தேன் என்றால் போன வருடம் சென்று பார்த்தேன், கடைசியாக 6 மாதத்திற்கு முன்பு சென்று பார்த்தேன். தாவா 4வது லக்க சொத்தில் வீட்டில் தற்போது 3ம் பிரதிவாதி வியாக்குளமேரி 1ம் பிரதிவாதி பார்வர் அம்மாள் குடியிருந்து வருகிறார்.

தாவா சொத்துக்கள் முன்பு எனது தகப்பனார் சாமிநாதன் என்பவருக்கு பாத்தியப்பட்டது. எனக்கு சுமார் 50 வருடங்களுக்கு முன்பே திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணம் ஆன காலம் முதல் நான் எனது கணவர் ஊரில் தான் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் உள்ள முகவரியில் கண்டுள்ள உசிலை கண்மாய் கிராமத்தில் எத்தனை வருடங்களாக இருந்து வருகிறீர்கள் என்றால் திருமணம் ஆன நாள் முதல் தற்போது வரை இருந்து வருகிறேன்.

என் ஊருக்கும் தாவா சொத்துக்கள் உள்ள ஊருக்கும் எவ்வளவு கி.மீ இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய தகப்பனார் சாமிநாதன் எப்பொழுது இறந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மூத்த சகோதரி செல்வநாயக்கம்மாள் என்பவருக்கு எத்தனை வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது என்றால் நான் 5ம் வகுப்பு படிக்கும் போது திருமணம் நடைபெற்றது.

1ம் பிரதிவாதி பார்வர் அம்மாளுக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் திருமணம் ஆகாமல் வீட்டில் உள்ளார். செல்வநாயக்கம்மாள் உயிருடன் இருந்த காலக்கட்டத்தில் தாவா சொத்துக்களில் எவ்வித உரிமையும் கோரவில்லை என்றால் பாகம் எதுவும் கேட்கவில்லை. 1ம் பிரதிவாதி பார்வர் அம்மாள் தாவா சொத்துக்களில் தனக்கு பாக உரிமையும் உள்ளது என கோரியுள்ளாரா என்றால் அது பற்றி என்னால் சொல்ல முடியாது. தாவா 4வது லக்க சொத்துக்களில் 2ம் பிரதிவாதி ஜெபமாலை குடியிருந்து வந்தாரா என்றால் இருந்தார்.

தாவா 4வது லக்க சொத்தில் உள்ள வீடு அந்தோணிசாமிக்கு தேவைப்பட்டதால் மேற்படி வீட்டிலிருந்து காலி செய்ய 2ம் பிரதிவாதிக்கு சம்மதித்தாரா என்றால் அவராக தனியாக போய் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். அதற்காக அந்தோணிசாமி 2ம் பிரதிவாதிக்கு கொடுத்திருந்ததாக ஒப்புக்கொண்டார் எனில் சரியா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்தோணிசாமி ஒப்புக்கொண்டபடி 01.05.1998ம் தேதியில் ரூ.5000/-ம் 03.06.1998ம் தேதியில் ரூ.5000/-ம் 2ம் பிரதிவாதியிடம் கொடுத்தார் எனில் அது பற்றி எனக்கு தெரியாது.

தாவா 4வது லக்க சொத்துக்களுக்கு அந்தோணிசாமி பெயரில் 2ம் பிரதிவாதி கடந்த 01.05.1998ம் தேதி விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்தார்

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த விடுதலைப்பத்திரத்தில் தாவா 4வது லக்க சொத்தின் வீட்டினை காலி செய்துவிட்டு வீட்டு சாவியினை அந்தோணிசாமியிடம் ஒப்படைத்துவிட்டேன் என்றும், இனிமேல் தனக்கு சம்மந்தம் இல்லை என்றும், 2ம் பிரதிவாதி குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி விவரங்கள் அனைத்தும் அந்த அந்தகாலக்கட்டத்திலேயே தனக்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி கிளாரா புஷ்பம் மனநிலை சரியில்லாதவர் என்றால் சரிதான். அவர் 3ம் பிரதிவாதியின் பராமரிப்பில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். 1, 2, 3 தாவா லக்க சொத்துக்கள் உள்ளிட்ட சாமிநாதன் இதர சொத்துக்களை பொறுத்து 29.12.2005ம் தேதி பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்றால் பாகப்பிரிவினை எதுவும் ஆகவில்லை.

தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் சாமிநாதன் பெயரில் இல்லை. அதனை ஊர்ஜிதம் செய்து 29.12.2005ம் தேதியில் சொத்து பிரித்த விவரம் என்ற தலைப்பில் எழுத்து மூலமான ஆவணம் எழுதிக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1 முதல் 3 லக்க சொத்துக்களை பொறுத்து அந்தோணிசாமி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் நாங்கள் யாரும் பிரித்துக்கொள்ளவில்லை.

அதனடிப்படையில் தான் தாவா 1 முதல் 3 லக்க சொத்துக்கள் அந்தோணிசாமி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும் யார் பெயரில் தாவா சொத்துக்கு பட்டா உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சியம் பதில் கூறிவிட்டு, பிறகு சாட்சி அப்பா பெயரில் உள்ளதாக சாட்சியமளிக்கிறார். பட்டாவை ரத்து செய்து கூட்டுப்பட்டா வேண்டுமென்று எந்தக்காலத்திலாவது வருவாத்துறையில் மனு செய்தீர்களா என்றால் இல்லை.

தாவா 4வது இலக்க சொத்திற்கு வீட்டு வரி ரசீது யார் பெயரில் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 4வது இலக்க சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் எந்த காலத்திலும் தாவா 4வது இலக்க சொத்திற்கு வீட்டு வரி ரசீது என் பெயரில் செலுத்தவில்லை என்றால் சரிதான்.

தாவா 4வது இலக்க சொத்திற்கு மின்சார வரி ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் என் அண்ணன் அந்தோணிசாமி பெயரில் உள்ளது. நீங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் பாரா 6ல் இறுதி பகுதியில் 21.10.2013ம் தேதியில் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆட்சேபனை மனு கொடுத்துள்ளதாக கூறியுள்ளீர்கள் என்றால் நான் எந்த மனுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்துக்களுக்கு உங்களுக்கு பாகம் உள்ளதாக காட்டுவதற்கு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் எனக்கு அதில் பங்கு உள்ளது.

தாவா சொத்துக்களை பொறுத்து அந்தோணிசாமி என்பவர் 24.07.2002ம் தேதி 2ம் பிரதிவாதிக்கு பதிவில்லாத் கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்ததாக கூறுவது தவறா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் பொய்யாக போர்ஜரியான ஆவணம் என்பதால் அதனை ரத்து செய்ய வேண்டும் என்றால் எனக்குரிய பங்கை கொடுத்துவிட்டு ரத்து செய்ய வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி வழக்கு வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

Taken down by me in open court
readover/interpreted to the witness
in Tamil and acknowledged by
him/her to be correct.

District Munsif,
Manamadurai.